செ.வெ.எண்: 35 நாள்: 20.01.2020

**பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்தராவ், இஆப., அவர்கள் தலைமையில் இன்று (20.01.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 264 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பொது மக்கள் நேரில் அளித்தனர். இம்மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை விவரத்தை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்குமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கும்பகோணம் வட்டம், நாச்சியார் கோவில் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.அபிராமி என்பவருக்கு கருணை அடிப்படையில் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு மைய அமைப்பாளருக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் வழங்கினார்.

பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அனைத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.